# சபை என்றால் என்ன?

## What is the Church?

J.C. Choate



தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற
**கிருபையுள்ள வார்த்தை**
தபால் பெட்டி – 15, அரசரடி, மதுரை – 625 016.
போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com

## சபை என்றால் என்ன?

உலகத்தில் அநேக "சபைகள்" (Churches) உள்ளன என்று நமக்குத் தெரியும். இயற்கையிலேயே, எல்லோருமே தேவனுடையவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். மேலும் சபை என்றால் என்ன என்பதற்கு சில விநோதமான கூற்றுகளும் உள்ளன. அநேகர் சபையை, "மக்கள் எல்லாம் கூடி வந்து ஆராதனை செய்யக்கூடிய கட்டிடம்" என்று நினைத்துள்ளனர். மற்றவர்கள் அதை, பெயர் மற்றும் உபதேசத்தைப் பற்றி கவலைப்பட அவசியமற்ற நாமகர்ணக் கூட்டம் (அல்லது) பிரிவினைக் கூட்டங்களின் ஆவிக்குரிய கூட்டமைப்பு என நினைக்கின்றனர்.

**உண்மையில், சபை என்றால் என்ன ?** என்று நாம் அறிய விரும்பினால், பதிலுக்காக நாம் புதிய ஏற்பாட்டிற்கே செல்ல வேண்டும். **"சபை"** என்னும் வார்த்தை கிரேக்க வார்த்தையான **"எக்லீசியா"** என்னும் வார்த்தையிலிருந்து வருகிறது; அதற்கு **"வெளியே அழைக்கப்பட்டவர்கள்"** என்று பொருள். தேவ திட்டம் என்னவெனில், ஆண்டவர் இவ்வுலகத்தினின்று ஜனங்களை ஒரே குழுவாக அல்லது சரீரமாக இருக்கும்படி வெளியே அழைக்கின்றார்; மேலும் அவர்கள் அவருடைய ஜனங்களாகின்றனர். அவர்கள், இயேசு அவர்களுக்காக மரித்தார் என்றும், அடக்கம் பண்ணப்பட்டு கல்லறையினின்று மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார் என்றும் விசுவாசிக்கும் படியாக, சுவிசேஷத்தினால் அழைக்கப்படுகின்றனர். (1கொரி. 15:1-4).

சுவிசேஷமானது முழு உலகிற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும், அதை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவோர் தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்றும் கிறிஸ்து கூறியிருந்தார் (மாற்கு 16:15,16). மேலும் இப்படி இரட்சிக்கப்பட்டவர்களை ஆண்டவர் தாமே சபையினுள் சேர்க்கிறார். (அப். 2:47).



**கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டுவதாக தன்னுடைய** மரணத்திற்கு முன்பே **வாக்களித்திருந்தார்** (மத். 16:18). பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது பொழிந்தருளப்பட்டு, கூடியிருந்த மிகப்பெரிய கூட்டத்திற்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அவர்கள் பிரசங்கித்த எருசேலம் பட்டணத்தில் **கிறிஸ்துவினுடைய சபையானது முதலில் ஸ்தாபிக்கப்பட்டது.** இது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின் வந்த முதல் பெந்தகோஸ்தே நாளிலே நடந்தது; அதாவது கி.பி. 33-ல்.

வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவைப் பற்றி கூறும்படி வழிநடத்தப்பட்டனர்; மேலும் அவர்கள், எவ்வாறு கிறிஸ்து மனிதர்களுடன் வாழ்ந்தார், நன்மை செய்தார் என்றும், ஆனாலும் அந்த தேவ குமாரனாகிய இயேசுவை அந்த பாவிகள் பிடித்து சிலுவையில் அறைந்தனர் என்பதையும் அப்போஸ்தலர்கள் கூறினர்! தேவன் அவரை, கல்லறையில் விட்டு வைக்காமல் உயிருடன் எழுப்பினார்; அந்த இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளி, பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து ஆளுகை செய்கிறார். அப்போஸ்தலரின் இந்த பிரசங்கத்தைக் கேட்டபின், அநேகர் உணர்ந்தவர்களாக, **தாங்கள் என்ன செய்ய வேண்டும்?** என கதறினர். அவர்கள் தங்கள் **பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும்** என அறிவுறுத்தப்பட்டனர் (அப்.2:38,40); அப்படிச் செய்யும் போது ஆண்டவர் இரட்சிக்கப்பட்டவர்களை சபையிலே சேர்த்துக் கொள்வார்.

சபை என்று ஒன்று இருந்ததையும், ஜனங்கள் அதிலே சேர்க்கப்பட்டதையும், இங்குதான் முதன்முதலில் வேதாகமத்தில் வாசிக்கிறோம். தொடர்ந்து அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை நாம் வாசிக்கையில், மறுபடியும் மறுபடியும் அங்கும், அண்டை நாடுகளிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதையும், அங்கிருந்த பரவி உலகம் முழுவதையும் சென்றடைந்ததையும் வாசிக்கிறோம்!



**கிறஸ்து, ஒரே ஒரு சபையைத்தான் நிறுவினார்** (எபே. 4:4). மேலும் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகிய அந்த சபை, இன்றும் உலகம் முழுவதிலும் உள்ளது. உள்ளூர் சபைகள் என்ற முறையில், அது உலகின் அநேக இடங்களில் உள்ளது (ரோமர் 16:16). ஆனாலும் அந்த எல்லா உள்ளூர் சபைகளும் சேர்ந்து ஒரே சபையாக, கிறிஸ்துவின் சபையாக உள்ளது.

- தன்னுடைய சபைக்கு கிறிஸ்துவே அதிகாரியாகவும், தலைவராகவும் இருக்கிறார் (கொலோ. 1:18).
- கிறிஸ்துவே தனது சபையின் இரட்சகராக உள்ளார் (எபே. 5:23); ஏனெனில் சபையை மீட்கும்பொருட்டு அவர் கொடுத்த விலை, தனது இரத்தம்,
- கிறிஸ்துவே தனது சபையின் அஸ்திபாரமாக இருக்கிறார் (1கொரி. 3:11).
- சபை கிறிஸ்துவின் மணவாட்டி எனப்படுவதால், அதற்கு அவரது பெயரே உள்ளது (ரோமர் 16:16; எபே. 5:25-32). அதனுடைய அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், அவருடைய பெயராலேயே அழைக்கப்படுகின்றனர், ''கிறிஸ்தவன்'' கிறிஸ்துவைப்போல (அப். 11:26, 1பேதுரு 4:16).
- தன்னுடைய சபையை பெற்றுக் கொள்ளும்படி ஒரு நாளில் திரும்பவும் வருவதாக கிறிஸ்து வாக்களித்துள்ளார்; மேலும் அந்த சபையை அவர் பிதாவிடம் ஒப்படைப்பார் (1கொரி. 15:24).

கிறிஸ்து இவ்வுலகில் இருக்கும் போது, எதிர்வரும் காலங்களில் தன்னுடைய ஜனங்களாகிய தனது சபை ஒற்றுமையாக இருக்க வேண்டும் என ஜெபித்தார். தன்னை, ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தருடைய பந்ததியில் நினைவுகூர்ந்து, ஆவியிலும் உண்மையிலும் சேர்ந்து பிதாவை ஆராதிக்க வேண்டும் என ஜெபித்தார் (யோவா. 4:24; அப். 20:7).



மனிதர்கள், சபை என்றால் என்ன என்று முழுமையாக அறிந்துகொள்ளும்படி, வேதாகமத்தில் ஆவியானவர் பல காரியங்களை கூறுகிறார்.

சபை என்பது கிறிஸ்துவின் **"சரீரம்"** என்று கூறப்படுகிறது; அதாவது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம். நம்முடைய சரீரத்தையும், தலையையும் ஒப்பிட்டுப் பார்த்து, கிறிஸ்து கூறுகிற பிரகாரமாக அவருடன் இணைந்தே சபையாகிய நாம் எவ்வாறு வேலை செய்ய வேண்டும் என புரிந்துகொள்கிறோம் (கொலே. 1:18; எபே. 4:4).

மேலும் நாம், வேத வசனங்கள் ஒரே ஒரு சபையைத் தான் அடையாளம் காட்டுகிறது என்றும்; மேலும் அது உபதேசம், ஐக்கியம் ஆகியவற்றில் எவ்வாறு ஒரே ஒரு தலை தான் ஒரு சரீரத்திற்கு இருப்பது போலவும், அந்த தலை கூறும் வழி நடத்தலின்படியே முழு சரீரமாக இயங்குவதைப் போலவும், சபை இருக்க வேண்டும்.

**சபையானது, தேவனுடைய "வீடு"** என்று கூறப்பட்டுள்ளது (1 தீமோ. 3:15); அதாவது, தேவனுக்குரிய ஆவிக்குரிய வீட்டார் (அல்லது) குடும்பம். ஒரு மனிதனுக்கு இந்த உலகில் நிறைய குடும்பங்கள் இருக்கும் பட்சத்தில், நாம் அவரை நல்ல மனிதன் என்று கூறமாட்டோம். அதேப்போல் தான், எல்லா நாமகர்ண கூட்ட (பிரிவினை) சபைகளும் கிறிஸ்துவினுடைய குடும்பங்களே என்று ஜனங்கள் கூறுவது, அவரை பல மனைவியுடைய புருஷனாக அவமானப்படுத்துகிறோம்.

சபையானது ஆடுகள் நிறைந்த ஒரு ஆட்டு மந்தைக்கு ஒப்பிடப்படுகிறது; மேலும் அங்கு பாதுகாப்பு நிறைந்த இடமாகவும், தன் மந்தையின் ஆடுகளின் மேய்ப்பனாகவும் இயேசு இருக்கிறார் (யோவான் 10ம் அதி.)

இன்னொரு விதத்தில் சபையானது, இயேசுவை திராட்சை செடியாகவும் கிறிஸ்தவர்களை அதின் கொடிகளாகவும்



கூறுவதைப்போல் ஒப்பிடப்படுகிறது; மேலும் இயேசுவில் நிலைத்திருந்து, கொடிகள் தேவனுக்கு கனி கொடுக்க வேண்டும் (யோவா. 15:1-11).

**சபையானது ஒரு நாமகர்ண கூட்டமோ** அல்லது நாமகர்ண கூட்டங்களின் கூட்டமைப்போ அல்ல. அது ஒரு மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட எந்த சபைக் கூட்டமோ அல்லது மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட எந்த நிறுவனமோ அல்ல. அது ஒரு சபைகூடும் கட்டிடமும் அல்ல. மாறாக, **சபையானது உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்ட தேவனுடைய குடும்பமாகும்.** மேலும் அது, சபைக்காக மரித்த **இயேசு கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக, இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாக உள்ளது.**

பைபிளின் ஒரே உண்மையான சபையின், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்ட அந்த ஒரே ஒரு சபையின், மேலும் எந்த சபைக்காக ஒரு நாளில் இயேசு மறுபடியும் வரப்போகிறாரோ அந்த ஆண்டவருடைய சபையின் அங்கமாக நீங்கள் இருக்கிறீர்களா? இல்லையெனில், நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அந்த மகிமையான சபையின் அங்கமாகும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். பைபிள் கூறும் சபையைப் பற்றி நீங்கள் அறிய விரும்பினால் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சிகள்**

தமிழன் T.V.

ஞாயிற்றுக்கிழமை காலை 6-45 மணி
செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :